இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும்

இலங்கை பேராளர் குழுவின் தலைவருமான

**மாண்புமிகு மங்கள சமரவீர, பா.உ.**

அவர்களினால் ஆற்றப்பட்ட உரை

மனித உரிமைகள் உயர் ஆணையாளரினால் மனித உரிமைகள்
உயர் ஆணைக்குழுவின் A/HRC/RES/30/1 ஆம்
மனித உரிமைகள் தீர்மானத்தின் நடைமுறைப்படுத்தல் மீதான
வாய்மொழிமூல அறிக்கையின் முன்வைப்பு, விடயம் 2

மனித உரிமை பேரவையின் 32 வது அமர்வு

2016 யூன் 29 ஆந் திகதி, ஜெனீவா

ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கும் பிற சருவதேச
அமைப்புகளுக்குமான நிரந்தர தூதரகம்

**இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்**
**மாண்புமிகு மங்கள சமரவீர, பா.உ.,**
**அவர்களினால் ஆற்றப்பட்ட உரை**

**ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின்**
**32 வது அமர்வு, 2016 யூன் 29 ஆந் திகதி, ஜெனீவா**

திரு தலைவர் அவர்களே!

மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அவர்களே!

அதி மேதகையோர்களே!

மேன்மை தங்கிய பேராளர்களே!

கடந்த ஒக்டோபரில் இப்பேரவையின் 30 வது அமர்வில் இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் ஊக்குவித்தல், பற்றிய 30/1 ஆம் தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியதன் மூலம் 2015 சனவரியில் சனாதிபதி மைத்திரிபால அவர்கள் தேர்தலில் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் நீண்டகாலமாக நிலவிய ஈடுபடாமை, தன்மைத்தானே தனிமைப்படுத்தல் மற்றும் மோதல் ஆகிய நிலைமைகளிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டுள்ளது.

'கிழக்கின் சுவிற்சர்லாந்து' என்ற திறனைக் கொண்டதாக 1948 ஆம் ஆண்டில் பெற்ற சுதந்திரத்தின்போது தன்னைத்தானே வாழ்த்திக் கூறிக்கொண்ட இலங்கையானது ஓர் நாடாக கடந்த காலத்தில் நாம் எதிர்நோக்க வேண்டியவைகளாகவிருந்த பல துயரங்களிலிருந்து விடுபடுவதற்கும் உண்மையிலேயே எமது மக்கள் சமாதானத்தையும் வளவாய்ப்பையும் அறுவடை செய்வதன் பொருட்டு தற்போது ஓர் துணிவுள்ள புதிய நாடாக முன்னேறிச் செல்வதற்கு தயார் நிலையிலுள்ளது.

புதிய இலங்கை ஒன்றின் எல்லைக்கோட்டை வரைவதில் 30/1 ஆம் தீர்மானத்தின் ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்வதில் தமது பொறுப்பேற்பைப் பற்றி இவ்வாண்டு பெப்ரவரி 4 ஆம் திகதியன்று கொண்டாடப்பட்ட 68 ஆவது சுதந்திரதின ஆண்டுவிழாவின் போது இந்நாட்டுக்கு ஆற்றிய உரையில் சனாதிபதி சிறிசேன பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> *''எமது நாட்டினதும், எமது மக்களினதும் எமது பாதுகாப்புப் படையினரினதும் கௌரவத்தை பாதுகாப்பதன் பொருட்டு இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை இலங்கை கொண்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளதோடு இந்த முன்மொழிவுகளை பொறுமை, ஒழுக்காறு மற்றும் கட்டுப்பாட்டுடன் நாம் நடைமுறைப்படுத்துவோம்'' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அது சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவை என்பதுடன் இவை இத்தீர்மானத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வலுவூட்டப்படும்.*

இவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்தில் பதவிக்கு வந்து தனது முதலாவது ஆண்டை இலங்கையில் ஐக்கிய அரசாங்கமானது கொண்டாடும்போது ஓரளவு திருப்தி என்ற உணர்வுடன் பின்னோக்கிப் பார்க்கக்கூடியதாக பல சாதனைகள் அடையப்பட்டிருக்கும்.

எமது மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய ஆக்கபூர்வமான முறையில் சர்வதேச சமூகத்துடன் மிக நெருக்கமாக செயலாற்றுகின்ற அதேவேளை முதல் 100 நாட்களுக்குள் எய்தப்பட்ட ஜனநாயக மாற்றங்கள் அனேகமானவற்றை திரட்டுகின்ற அதே வேளையில் நாம் சிறந்த

நல்லாட்சியையும் சட்ட பாதுகாப்பையும் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும் பொருளாதார அபிவிருத்தி எய்துவதற்கும் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளோம்.

வினைத்திறன் மிக்கதாக நல்லிணக்க பொறிமுறைகள் நிலவுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு பிரதமரின் அலுவலகத்தின் கீழ் **"நல்லிணக்க பொறிமுறைகளைக் கூட்டிணைப்பதற்கான செயலகம்"** ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

விரும்பப்படும் நோக்கங்களை எய்துவதில் இடைக்கால நீதி நடைமுறை விளைபயன் திறனுள்ளதாக இருப்பதற்காக தேவையான பொறிமுறைகள் பொருத்தமான முறையில் வரிசைப்படுத்தப்பட்டும் இருக்க வேண்டுமென அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகின்றது. சில பொறிமுறைகளை ஒழுங்குபடுத்தல், நீதி, ஆக்கக்கூறை தவிர்ப்பதற்கான அல்லது தாமதப்படுத்தல் யுக்திகரமான அல்லது பிற வழிகளில் என அபாயக்குரல் எழுப்புவதற்கு ஆரம்பித்துள்ளனர். இது பிழையான ஒன்றாகும். நல்லிணக்க பொறிமுறைகளைக் கூட்டிணைப்பதற்கான செயலகமானது பொருத்தமான / இயைபுள்ள பொறிமுறைகளுக்காக தேவைப்படும் பயிற்சி மற்றும் திறன் விருத்தியையும் பெறுவதற்காக ஏற்கனவே நிபுணர்களுடன் கலந்துரையாடிச் செயற்படுகின்றது. அதாவது தொழினுட்பங்களை விசாரித்தல், சட்டநிபுணர்கள் வழக்குத் தொடர்தல் தந்திரோபாயங்கள் போன்றன. கலந்துரையாடல் செயல்முறைகளைத் தொடர்ந்தும் வடிவமைப்புகள் உறிய இடத்தில் இருக்கின்றபோது பொறிமுறைகளுக்காக தேவைப்படும் நிபுணத்துவமும் சரியான இடத்தில் இருக்கும்.

உண்மையைக் கண்டறிதல், நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் ஈடுசெய்தல் பொறிமுறைகளை வடிவமைப்பை அறிவிக்கும்/ வழங்கும் மக்களுடைய கருத்துக்களை தேடிப்பெறுவதற்கு தேவைப்பாட்டை முற்றுமுழுதாக சிவில் சமூகம் பிரதிநிதிகளை உள்ளடக்கும் ஒரு சிறப்பு செயலணி நியமிக்கப்பட்டுள்ளது.

மீள நிகழாமை எய்துவதை நோக்காகக் கொண்ட பரந்துபட்ட நல்லிணக்க விடயங்களில் செயற்படுத்துகின்ற மேற்படி செயலணியானது, ஜனாதிபதியின் அதிகார எல்லைக்குட்பட்டதும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் வழிநடத்தப்படுகின்றதுமான தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகத்தினால் கூட்டிணைக்கப்படுகின்றது.

உண்மையைக் கண்டறிதல் நடைமுறை உடைய அத்தியாவசிய ஆக்கக்கூறு ஒன்றாகவும் இடைக்கால நீதி நிகழ்ச்சி முறையில் உள்ள முதலாவது பொறிமுறையாகவும் உள்ள காணாமற் போனோர்களுக்கான நிரந்தரமானதும் சுதந்திரமானதுமான அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் அளிக்கப்பட்ட வரைபுச் சட்டமூலம் ஏற்கனவே வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், பாராளுமன்ற கட்டளைப் பத்திரத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது எமக்கு இலங்கையின் நல்லிணக்க செயற்முறையின் ஒரு மைல்கல்லாகும்.

காணாமற் போனோர் தொடர்பாக காணாமற் போனமைக்கான அத்தாட்சிப் பத்திரத்தை வழங்குவதற்கு வசதியாக 2010 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இறப்புப் பதிவுச் சட்டத்தில் திருத்தத்தை ஏற்படுத்துவதற்கான (தற்காலிக ஏற்பாடுகள்) சட்ட மூலம் ஒன்று அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு இம்மாத முற்பகுதியில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதுவும் கூட யூலை மாதத்தில் பாராளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (தாக்கல் செய்யப்பட்டுள்ளது)

வலுக்கட்டாயமாக காணாமற்போகச் செய்வதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை வலுப்படுத்தப்பட்டதுடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு செயல்வலு வழங்கும் பொருட்டு வரைபுச் சட்டவாக்கம் வர்த்தமானியில்

பிரசுரிக்கப்படுவதற்கும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காகவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

மோதல்களால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்வுக்காக நீடித்து நிற்கக்கூடிய தீர்வுகள் பற்றிய ஒரு தேசிய கொள்கை பரந்துபட்ட கலந்துரையாடல்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பிலிருந்து பெற்ற தொழிநுட்ப ஆதரவுடனும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இக்கொள்கை அங்கீகாரத்தை பெறுவதற்காக தற்பொழுது அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டிருப்பதுடன் பொதுமக்களுக்காகவும் வெளியிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் ஆகியவற்றின் விடயத்தில் இலங்கையின் பொறுப்பிற்கும் கடப்பாடுகளுக்கும் அமைவாக மிகவும் கண்டனம் தெரிவிக்கப்பட்டதும் மிகவும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதுமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பதிலீடு செய்யவுள்ளதுமான புதிய பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டவாக்கத்தின் முதலாவது வரைவிற்கான இறுதித்திருத்தங்களை குழுவொன்று தற்போது செய்து கொண்டிருக்கின்றது. இந்நோக்கத்திற்கான தொழினுட்ப உதவி ஐக்கிய நாடுகள் பேரவையின் பயங்கரவாத்திற்கு எதிரான குழுவின் நிறைவேற்று பணிப்பாளர் சபையிடம் நாடப்பட்டுள்ளது.

சித்திரவதை மீதான பூச்சியபெறுமைக்கொள்கையை அரசாங்கம் பேணுகின்ற போதிலும் கூட இந்த நிகழ்வு குறைக்கப்பட்டுள்ள போதிலும் அது நிறுத்தப்படவில்லை. நாம் இவ்விடயத்தின் பாரதூரத் தன்மையினால் பீடிக்கப்பட்டுள்ளோம் என்பதுடன் வழக்குத் தொடரல் மற்றும் குற்றத்தீர்ப்பு வழங்குவதற்கான தேவையை கவனத்திற்கு எடுத்துக் கொள்வதையும் உள்ளிட்டு சித்திரவதைக்கு எதிராகப் போராடுவதையும் அதை அகற்றுவதையும் நோக்கமாகக் கொண்டு பொலிசாருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் கூடுதலாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை உருவாக்குவதற்கும் தேவையான பொதுமக்களுக்கான கல்வி நெறியை ஊட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்குமாக இலங்கையிலுள்ள தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொலிசு ஆணைக்குழு ஆகியவற்றின் உதவியையும் கூட நாடியுள்ளோம்.

2017 இலிருந்து 2021 ஆம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதிக்கான தேசிய மனித உரிமை செயல்திட்டமொன்றை வரைவதற்கான சிறப்புப் பணி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அமைச்சர்கள் மட்டத்திலான குழுவொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் இராணுவப்படை மற்றுமொரு 701 ஏக்கர் காணிகளை விடுவித்து யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளரிடம் வழங்கியுள்ளது. இதில் 201.3 ஏக்கர் காணித்துண்டுகள் அவற்றின் மூல உடைமையாளர்களிடம் யூன் 25 ஆந் திகதியன்று கையளிக்கப்பட்டுள்ளது. அரசாங்கமானது சிவிலியன் மக்களிடமிருந்து பெறப்பட்ட சகல காணிகளும் ஆகப்பிந்தியதாக 2018ஆம் ஆண்டளவில் விடுவிக்கப்பட வேண்டுமெனவும் தேசிய நிலையங்களுக்காக அல்லது அபிவிருத்தி நோக்கங்களுக்காக தேவைப்படக்கூடிய காணித்துண்டுகளின் உடைமையாளர்களுக்கு அக்காணித்துண்டுகளுக்கான இழப்பீடுகள் முழுமையாக வழங்கப்படுமெனவும் தெளிவாக இராணுவப் படைக்கு அறிவுறுத்துரை வழங்கியுள்ளது.

சனநாயகம், அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் ஆகியனவே புதிய இலங்கையின் கட்டடக்கலையமைப்பு கட்டி எழுப்பப்பட்டுள்ள மூன்று பிரதான தூண்களாகும். அரசாங்கமானது இலங்கைக்கான புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கும் வேலையிலும் ஈடுபட்டுள்ளது. இந்த அரசியலமைப்பு கடந்த ஆண்டில் நாம் எய்தியுள்ள சனநாயக இலாபங்களைப் பொறித்துக் கொள்ளும் அதே வேளையில் இது பல்லின, பல்சமய, பன்மொழி நாடாகவிருந்து சகலருக்கும் சமஉரிமைகளும் நீதியும் கௌரவமும் வழங்கப்படுமென்பதுடன் சுதந்திரம் பெற்றதிலிருந்து கொள்ளை நோயாகப் பரவி

நாட்டினம் என்ற எமது ஐக்கியத்தைத் தடைசெய்து கொண்டிருக்கின்ற சில விடயங்களைப் பற்றி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளும் புதிய அரசியலமைப்பிற்கான பொதுமக்களின் கருத்துகளை நாடிப்பெற்றுக் கொள்ளும் சிறப்புப் பணி வழங்கப்பட்டுள்ள பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழு அதன் வேலையைத் தற்போது பூர்த்தி செய்துள்ளதுடன் அது தனது அறிக்கையை அரசாங்கத்திடம் கையளித்துள்ளது.

தற்போது இலங்கை உலகத்திற்கு திறந்த நிலையில் இருப்பதுடன் துணிவுடனும் நம்பிக்கையுடனும் சருவதேச சமூகத்துடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. வலுக்கட்டாயமாக அல்லது தன்னிச்சையின்றி காணாமல் போகச்செய்யப்பட்டோர்கள் பற்றிய விசேட செய்தி அறிக்கையாளரும் சித்திரவதைக்கு எதிரான செய்தி அறிக்கையாளரும் இலங்கைக்கு விஜயம் செய்து தங்களுடைய அவதானிப்புரைகளை எம்முடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். இந்அ அவதானிப்புரைகள் மீது தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது உண்மை, நீதி, ஈடுசெய்தல்கள், மீள நிகழாமலிருப்பதற்கு உத்தரவாதமளித்தல் பற்றிய விசேட செய்தி அறிக்கையாளர் ஓராண்டுக்காலப்பகுதி தொழினுட்ப மதிப்புரை வழங்கும் திறனில் இலங்கைக்கு மூன்று தடவைகள் விஜயம் செய்துள்ளார். பெப்புருவரி மாதத்தில் உயர் ஆணையாளர் ஆகிய தங்களையும் வரவேற்பதிலும் கூட நாம் மகிழ்ச்சியடைந்துள்ளோம் என்பதுடன் செயலாளர் நாயகம் திரு. பான்கீ மூன் அவர்களும் கூட இவ்வாண்டில் இலங்கைக்கு விஜயம் செய்வாரென்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இலங்கையின் முன்னேற்றத்தில் கரிசனையுடைய சகலரையும் எம்மைப் பற்றி நியாயமான முறையில் அல்லது நியாயமற்ற முறையில் விமர்சனம் செய்கின்றவர்களையும் உள்ளடக்கி இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம். நாம் பாராட்டையும் கண்டனத்தையும் சரியான மனப்பாங்குடன் ஏற்றுக் கொள்வதற்கும் இவை இரண்டையும் பற்றி சிந்தனையில் எடுத்துக் கொள்வதற்கும் எம்மை திருத்திக் கொள்வதற்கும் தயார் நிலையிலும் விருப்பத்துடனும் இருக்கின்றோம்.

எமது யுக்திகளையும் திட்டங்களையும் விளைபயனுள்ள முறையில் தெரியப்படுத்துவதற்குத் தவறியுள்ளமை எமது பலவீனங்களில் ஒன்றாகவிருந்தது. இந்த அத்தியாவசியத் தேவைப்பாட்டை கவனத்திற்கு எடுத்துக் கொள்வதற்கான ஓர் தொடர்பாடல் இயக்கத்தை ஆரம்பிப்பது பற்றி நாம் ஏற்கனவே திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றோம்.

திரு. தலைவர் அவர்களே!

நல்லிணக்கம் என்பது உடனடியாக மிகவும் விரைவாக குறுகிய காலப்பகுதிக்குள் கொண்டுவரப்படக்கூடிய விடயமல்ல. அது முயற்சி, கடின உழைப்பையும் பொறுப்பேற்றையும் மற்றும் கவனமானதும் தொடர்ச்சியானதும் திட்டவட்டமானதுமான நடவடிக்கையை வேண்டுகின்றது. அது மேலும் வேலை மேற்கொள்ளப்படுவதை வேண்டாமல் அடையப்படக்கூடிய ஓர் முடிவான விடயமல்ல. அது எய்தப்பட்டுவிட்ட சரியான ஓர் பெட்டி என அடையாளக் குறியிடக்கூடிய விடயமன்று. அது தொடர்ச்சியான கடின முயற்சியை வேண்டுகின்ற ஓர் பிரயாணமாகும். அது சந்ததியினர்களுக்கு குறுக்காக எமது நாட்டினம் பிணிக்கப்பட வேண்டிய ஓர் பொறுப்பேற்பாகும் என்பதுடன் அது ஓர் ஆட்சியின் மையக்கொள்கையாகும். இது ஏனெனில் நாம் இதில் தவறுவோமேயானால் நாம் அதற்குச் செலுத்த வேண்டிய விலை எமது நாட்டினமானது ஒருவரையும் விலக்காக விட்டுவைக்காத முப்பது ஆண்டுக்கால இரத்தம் சிந்தலுக்குப் பின்னர் தாங்கிக் கொள்ளமுடியாத பாதிப்பாக இருக்கும் என்பதனாலாகும்.

பண்டைய உரோமானியர்கள் பெஸ்டினாலென்ரே என அழைத்த அதாவது வேகத்தை மெதுவாக என்ற கொள்கையொன்றை நாம் பின்பற்றுகின்றோமென்பதை நான் குறிப்பிடுகின்றேன். இது நாம் அடைந்து கொண்டிருக்கும் முன்னேற்றம் மிகவும் வேகமானதாக சிலருக்கும் மிகவும் மந்தமானது என ஏனையோர்களுக்கும் தோற்றலாம்.

2015 சனவரியிலிருந்து இதுவரை நாம் எய்தியுள்ள முன்னேற்றம் 'குழந்தை நடவடிக்கைகள்' போலச் சிலருக்குத் தோற்றலாம். ஆனால் எமக்கு அவை 'இராக்கதப் பாய்ச்சல்' ஆக இருக்கின்றது. சிலர் நாம் நன்மையே நடக்கும் என்ற மனநிலையிலும் நன்னம்பிக்கையிலும் நம்பிக்கையுடையவர்களாகவும் இருப்பதாக குற்றம் சாட்டியுள்ளனர். நாம் அப்படி இருக்கின்றோமென நான் கூறவேண்டும். அப்படிச் சொல்லாவிட்டால் நாம் எமது குறிக்கோள்களை எய்துவதற்காக பணியாற்ற முடியும். இதில் முக்கியமான விடயம் என்னவெனில் எமது நன்மையே நடக்கும் என்ற நிலையானது ஓர் மாயத்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. அது இதுவரை நாம் அடைந்த உள்ளபடியான பெறுபேறுகளையும் எமது அரசாங்கம் ஒன்றிணைக்கப்பட்டதும் முழுமையாக்கப்பட்டதும் பொருத்தமான முறையில் வரிசைப்படுத்தப்பட்டதுமான முறையில் வெவ்வேறு நடைமுறைகளை நாம் பின்பற்றுவதை இயலச் செய்வதுமான முறையில் இயங்கிக் கொண்டிருப்பது தெரிந்ததுமான நிலையை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

உடனடியாக கீழ் மட்டத்தில் இந்த விடயத்தைக் கையாளுகின்ற அதே வேளையில் சருவதேச உதவியுடன் நீதிப்பொறிமுறையொன்றை நிறுவும் கூடுதலன பாரதூரமானதும் முரண்பாடுள்ளதுமான விடயத்தைக் கையாளுவதற்கான யுக்திகளையும் திட்டங்களையும் நாம் கொண்டுள்ளோம். இலங்கை சருவதேச உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு ஓர் அந்நிய நாடல்ல என்பதுடன் அநேக விசாரணை நிபுணர்களும் சட்ட நிபுணர்களும் கடந்தகாலத்தில் எம்முடன் பணியாற்றியுள்ளனர். உண்மையிலேயே சருவதேச பங்குபற்றுதலின் தன்மை, மட்டம் வகிபாகம் மீது மாறுபாடான கருத்துக்கள் உள்ளன. மாறுபாடான கருத்துக்கள் சுகாதார சனநாயகத்திற்கும் உசாத்துணை நடைமுறைக்குமான அறிகுறிகளாகவுள்ளன. எனினும் அத்தகைய வெவ்வேறு கருத்துக்கள் உள்ள போதிலும் இறுதியாக நிறுவப்படும் பொறிமுறையானது நியாயமான விசாரணை மற்றும் உரிய நடைமுறை உத்தரவாதங்களுடன் பங்குதாரர்களின் விசேடமாக பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளவொன்றாக நிறுவப்படும்.

முன்னாலுள்ள பாதை நிச்சயமாக சவால் உள்ளதாகவிருக்கின்றபோதிலும் எமது உறுதிப்பாடும் நல்லிணக்கத்தை எய்துவதற்கான தீர்மானமும் அதை வெற்றி கொள்ள உதவும். சிலர் அவ்வண்ணம் செய்வதற்கான எமது நேர்மை பற்றி சந்தேகப்படுகின்றார்கள் என்பதுடன் ஒரு சிலர் நாம் இந்த முயற்சியில் தோல்வி அடைய வேண்டுமென விரும்புகின்றனர். உண்மையிலேயே கரிசனையுடையவர்களும் இலங்கை இம்முயற்சியில் வெற்றியடைய வேண்டுமென நம்புகின்றவர்களுமான எமது நண்பர்களுக்கு தாமதம் அடையும் ஒவ்வொரு விநாடியும் முடிவில்லாத காலமாகத் தோற்றுகின்றதுடன் அவர்கள் அரசாங்கமானது அதன் சரியான வழியையும் வெற்றியடைவதற்கான அரசியல் உறுதிப்பாட்டையும் இழந்து விட்டதாகவும் பயப்படுகின்றனர். பிழையான தகவலைப் பெற்றும் பிழையாக வழிகாட்டப்பட்டுமுள்ள ஏனையோர்கள் இதுவரை எய்தப்பட்ட சாதனைகளை நம்பாத நிலையியல் அல்லது எய்தப்பட்ட சாதனைகளைப் பற்றிய அறியாதவர்கள் என்ற நிலையில் உள்ளனர். அத்துடன், உண்மையிலேயே நாம் வெற்றியடையக்கூடாது என பிரார்த்தனை செய்பவர்களும் உள்ளனர். இவ்விடயம் தொடர்பில் இருதரப்புகளிலும் தீவிரவாதிகள் உள்ளனர். இவர்கள் கடந்த காலத்தின் பேய்களுடனான அணியில் இருப்பதுடன் நல்லிணக்கப் பிரயாணத்தில் இலங்கை தோல்வி அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியடைவதற்கு காத்துக் கொண்டிருக்கின்றனர். தீவிரவாதிகளின் விடயத்தில் நான் கூறுவதற்கு எதுவுமில்லை, ஆனால் ஏனையோர்கள் அனைவருக்கும் நான் கூறுவது என்னவெனில் அரசாங்கமானது நல்லிணக்கத்தையும் அபிவிருத்தியையும் எய்துவதற்கும் மீள் நிகழ்வு ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்குமான தனது பொறுப்பேற்பில் ஐக்கியத்தையும் உறுதியையும் கொண்டுள்ளது என்பதாகும். இந்த மிகவும் சவால் நிறைந்ததும் ஆனால் எமது நாட்டினத்திற்கு அத்தியாவசியமான நடைமுறையை முன்னெடுத்துச் செல்வதில் உங்களுடைய சந்தேகங்களின் நன்மையை நாம் பெற்றுக் கொள்வோமாக.

நான் முன்னர் குறிப்பிட்டதுபோல இலங்கை உலகத்திற்கு திறந்துவிடப்பட்ட நிலையிலுள்ளது என்பதுடன் நான் எமது சகல நண்பர்களையும் நாம் என்ன செய்துள்ளோம் என்பதை வந்து பார்வையிடுமாறும் இந்த வரலாற்றுப் பிரயாணத்தில் எமக்கு உதவி புரியுமாறும் அழைக்கின்றேன்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நான் இங்கு திரும்பவும் வரும்போது நாம் கட்டிஎழுப்ப விரும்பும் எமது புதிய இலங்கையின் எல்லைக்கோடுகள் மிகவும் தெளிவானவைகளாக இருக்கும்.

தலைவர் அவர்களே! பல்வேறு வழிவகைகளில் அதாவது ஆலோசனை வழங்கல், தொழினுட்ப உதவி வழங்கல் மூலமாக பல்வேறு வழிவகைகளில் இச்சவால் நிறைந்த பிரயாணத்தில் இலங்கைக்கு உதவி வழங்குகின்றவர்களின் வகிபாகத்தை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். நாம் உயர் ஆணையாளரினாலும் அவருடைய அலுவலகத்தினாலும் வழங்கப்படும் ஆதரவையும் பெரிதும் பாராட்டுகின்றோம். எமது சாதனைகளை உயர் ஆணையாளரின் அறிக்கை ஏற்றுக் கொள்ளுகின்றமையையும் நாம் கவனத்திற்கு எடுத்துக் கொண்டுள்ளோம். அதில் செய்யப்பட்டுள்ள அவதானிப்புரைகள் எமக்கு சிந்திப்பதற்கு கரிசனைக்குரிய துறைகளில் கவனம் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கும் உதவுகின்றமையை நாம் பாராட்டுவதுடன் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றம், நல்லிணக்கம் ஆகியவற்றை நோக்கிய எமது பிரயாணத்தில் சருவதேச சமூகத்துடன் நெருக்கமான ஒத்துழைப்பை தொடருவதையும் எமது மக்களுக்கு நீடித்த சமாதானத்தை எய்துவதையும் எதிர்பார்த்த நிலையிலுள்ளோம். எமது பிரயாணத்திற்கு பொறுமையுடனும் விடாமுயற்சியுடனும் ஆதரவு வழங்குமாறு நான் உங்கள் அனைவரையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நன்றி.